## யூன்– 24 – ஞாயிறு

### புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு

### "கருப்பையில் இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார்" ( எசா 49:1)

**முதல் வாசகம் : ஏசாயா 49 : 1 – 6**

தீவு நாட்டினரே, எனக்குச் செவிகொடுங்கள் தொலைவாழ் மக்களினங்களே, கவனியுங்கள் கருப்பையில் இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார் என் தாய் வயிற்றில் உருவாகும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்.என் வாயைக் கூரான வாள்போன்று ஆக்கினார் தம் கையின் நிழலால் என்னைப் பாதுகாத்தார் என்னைப் பளபளக்கும் அம்பு ஆக்கினார் தம் அம்பறாத் தூணியில் என்னை மறைத்துக் கொண்டார்.அவர் என்னிடம், "நீயே என் ஊழியன், இஸ்ரயேலே! உன் வழியாய் நான் மாட்சியுறுவேன்" என்றார்.நானோ, "வீணாக நான் உழைத்தேன் வெறுமையாகவும் பயனின்றியும் என் ஆற்றலைச் செலவழித்தேன் ஆயினும் எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது என் பணிக்கான பரிசு என் கடவுளிடம் இருக்கின்றது" என்றேன்.யாக்கோபைத் தம்மிடம் கொண்டு வரவும், சிதறுண்டு இஸ்ரயேலை ஒன்று திரட்டவும் கருப்பையிலிருந்தே ஆண்டவர் என்னைத் தம் ஊழியனாக உருவாக்கினார் ஆண்டவர் பார்வையில் நான் மதிப்புப்பெற்றவன் என் கடவுளே என் ஆற்றல் அவர் இப்பொழுது உரைக்கிறார். அவர் கூறுவது யாக்கோபின் குலங்களை நிலைநிறுத்துவதற்கும் இஸ்ரயேலில் காக்கப்பட்டோரைத் திருப்பிக் கொணர்வதற்கும் நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் மீட்பை அடைதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்.

**பதில்பாடல் :** வியத்தகு முறையில் என்னைப் படைத்ததால் நான் உமக்கு நன்றி நவில்கிறேன்.

**இரண்டாம் வாசகம் : திருத்துதர் பணி 13 : 22 – 26**

அக்காலத்தில் பவுல் கூறியதாவது: கடவுள் சவுலை நீக்கிவிட்டுத் தாவீதை அவர்களுக்கு அரசராக ஏற்படுத்தினார் அவரைக் குறித்து "ஈசாயின் மகனான தாவீதை என் இதயத்துக்கு உகந்தவனாகக் கண்டேன் என் விருப்பம் அனைத்தையும் அவன் நிறைவேற்றுவான்" என்று சான்று பகர்ந்தார்.தாம் அளித்த வாக்குறுதியின்படி கடவுள் அவருடைய வழிமரபிலிருந்தே இஸ்ரேலுக்கு இயேசு என்னும் மீட்பர் தோன்றச் செய்தார். அவருடைய வருகைக்கு முன்பே யோவான், "மனம்மாறி திருமுழுக்குப் பெறுங்கள்" என்று இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் பறைசாற்றி வந்தார்.யோவான் தம் வாழ்க்கை என்னும் ஓட்டத்தை முடிக்கும் தறுவாயில் "நான் யார் என நீங்கள் நினைக்கிறீர்களோ அவரல்ல நான். இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார் அவருடைய மிதியடிகளை அவிழ்க்கவும் எனக்குத் தகுதியில்லை" என்று கூறினார். சகோதரரே, ஆபிரகாமின் வழிவந்த மக்களே, இங்கு இருப்போருள் கடவுளுக்கு அஞ்சி நடப்போரே, இந்த மீட்புச் செய்தி நமக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது.

**நற்செய்தி : லுக்கா 1 : 57 – 66, 80**

அவர்கள் அவரிடம், "உம் உறவினருள் இப்பெயர் கொண்டவர் எவரும் இல்லையே" என்று சொல்லி,"குழந்தைக்கு என்ன பெயரிடலாம்? உம் விருப்பம் என்ன?" என்று தந்தையை நோக்கிச் சைகை காட்டிக் கேட்டார்கள்.அதற்கு அவர் எழுதுபலகை ஒன்றைக் கேட்டு வாங்கி, "இக்குழந்தையின் பெயர் யோவான்" என்று எழுதினார். எல்லாரும் வியப்படைந்தனர். அப்பொழுதே அவரது வாய் திறந்தது. நா கட்டவிழ்ந்தது அவர் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்.சுற்றி வாழ்ந்தோர் அனைவரும் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு அஞ்சினர். இச்செய்தி யூதேய மலை நாடெங்கும் பரவியது. கேள்விப்பட்டவர்கள் யாவரும் இச்செய்தியைத் தங்கள் உள்ளங்களில் இருத்தி, "இக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ?" என்று சொல்லிக் கொண்டார்கள். ஏனெனில் அக்குழந்தை ஆண்டவருடைய கைவன்மையைப் பெற்றிருந்தது.
குழந்தையாயிருந்த யோவான் வளர்ந்து மனவலிமை பெற்றார். இஸ்ரயேல் மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தும் காலம் வரை அவர் பாலை நிலத்தில் வாழ்ந்து வந்தார்.

**தியானம்:** இன்று நம்மை வாழவைத்துக்கொண்டிருக்கும் இந்த கியூபெக் மாநிலம் தனது பிறந்த தினத்தை நினைவு கூருகின்றது. அதற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். தொடர்ந்தும் இம்மாநிலத்தை எல்லாவிதமான ஆபத்துக்களிலும் இருந்து இறைவன் பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுவோம். மனிதனின் பிறப்பு மகிழ்வையும் இறப்பு சோகத்தையும் தருகின்றது. மலரின் இறப்பு காயாகவும், காயின் இறப்பு பழமாகவும், பழத்தின் இறப்பு விதையாகவும், விதையின் இறப்பு மரமாகவும் மாறுகின்றது. இன்றைய நற்செய்தி யேசுவின் வரலாற்றுப் பாதையில் மிக முக்கிய பங்கினை வகித்த திருமுழுக்கு அருளப்பரின் பிறப்பைப் பற்றிக் கூறுகின்றது. பாலை நிலத்தில் ஒலித்த குரலுக்கு சொந்தமானவர்தான் இந்த திருமுழுக்கு அருளப்பர். வயது முதிர்ந்த தம்பதியினரின் விண்ணப்பம் கேட்கப்பட்டதால் கடவுளால் அருளப்பட்டவர். தந்தையின் விசுவாத்தில் காணப்பட்ட சந்தேகம் அவரை ஊமையாக்கியது. செம்மறியின் பாதையை ஆயத்தம் செய்தவர் இவர். மக்களுக்கு நீரினால் திருமுழுக்கு கொடுத்தவர். யேசுவை இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி என்று மக்களுக்கு சுட்டிக் காட்டியவர், உண்மைக்கு சான்றாக வாழ்ந்தவர், ஏரோது அரசன் செய்த தவறை சுட்டிக்காட்டியதால் அவரின் குரல் நசுக்கப்பட்டது. பெண்களிடத்தில் பிறந்தவர்களுள் மேலானவர் என்று இறைமகனால் வர்ணிக்கப் பட்டவர். அவரின் பிறப்பு எமக்கு கூறும் செய்தி என்ன? திருச்சபையின் வரலாற்றில் பலர் வேத சாட்சிகளாக மரித்தவர்கள். அவர்கள் தமது வாழ்வையும், உயிரையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்தார்கள். கடவுளின் பணிக்கென தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்கள். நம்மையும் ஒரு திட்டத்துடன் தான் கடவுள் படைத்தார். முதல் வாசகத்தில் "கருப்பையில் இருக்கும்போதே ஆண்டவர் என்னை அழைத்தார்" என்று பார்க்கின்றோம். அவ்வாறு அழைக்கப்பட்ட நாம் அந்த அழைப்பிற்கு ஏற்ப வாழ்கின்றோமா? இறை அரசை அறிவிப்பது எமது பணி. அது எமது வாழ்வில் வாழப்பட வேண்டும். வீட்டில், வேலை இடங்களில், சமுதாயத்தில் எம் நடவடிக்கைகள் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். எம்மைப் பார்ப்பவர்கள் யேசுவை எம்மில் கண்டு கொள்ள வேண்டும். முடியுமா? எழுதும் பென்சில் செய்யும் தவறை திருத்த அழிறப்பர் உதவுகின்றது. பென்சிலால் எழுத முடியுமே ஒழிய அழிக்க முடியாது. அழிறப்பறால் திருத்த முடியுமே ஒழிய எழுத முடியாது. அவ்வாறுதான் படைக்கப்பட்ட ஒவ்வொன்றிற்கும் தனி அடையாளமும், பணியும் உண்டு, அதனை உணர்ந்து எமது பணியை கண்டு அதை நிறைவேற்ற முயற்சி எடுப்போம்.